DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 93/2011

Miscellaneous :

Sessions : PW 3

Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| Name | ராஜு |
|---|---|
| Father / Husband Name | ஆறுமுகம் |
| Village | அச்சிறுப்பாக்கம் |
| Taluk | மதுராந்தகம் |
| Age | 35 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **23.10.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது அச்சிறுபாக்கத்தில் வசித்து ஆட்டோ ஓட்டி வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **( ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** தேதி மற்றும் மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 13 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் அச்சிறுபாக்கத்தில் உள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக்கு சற்று தொலையில் உள்ள ஆட்டோ ஸ்டேண்டில் நானும் எனக்கு தெரிந்த அண்ணன் ரமேஷ் என்பவரும் நின்று கொண்டிருந்தபோது போலிசார் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியுடன் இணைந்து அமைந்துள்ள ATM ல் திருடு போய்விட்டதாக கூறி அதனை திருடிய நபரை தாங்கள் பிடித்துவைத்துள்ளோம் என்று கூறி அதற்காக எங்களிடம் கையொப்பம் கேட்டார்கள். நாங்கள் அதில் கையொப்பம் செய்தோம். போலிசார் எங்களை விசாரிக்கவில்லை.

**குறுக்கு விசாரணை**

**2.** நான் கையொப்பம் செய்த தாளில் என்ன விவரம் எழுதியிருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நாங்கள் திருடியதாக சொல்லப்படும் நபரை பார்க்கவில்லை என்றாலும் கையொப்பம் மட்டும் செய்தேன் என்றால் சரிதான். போலிசார் போட்ட பொய் வழக்கில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

23/10/25

Judicial Magistrate No.II
Madurantakam

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 93/2011

Miscellaneous :

Sessions : PW 4

Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | ரமேஷ் |
| Father / Husband Name | முனுசாமி |
| Village | அச்சிறுப்பாக்கம் |
| Taluk | மதுராந்தகம் |
| Age | 46 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **23.10.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது அச்சிறுபாக்கத்தில் வசித்து ஆட்டோ ஓட்டி வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **( ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** தேதி மற்றும் மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 13 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் அச்சிறுபாக்கத்தில் உள்ள கூட்ரோடு ஆட்டோ ஸ்டேண்டில் நானும் எனக்கு தெரிந்த அசா3 ராஜு என்பவரும் நின்று கொண்டிருந்தபோது போலிசார் எங்களிடம் கையொப்பம் கேட்டார்கள். நான் அதில் கையொப்பம் செய்தேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**குறுக்கு விசாரணை**

**2.** போலிசார் போட்ட பொய் வழக்கில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

23/10/25

Judicial Magistrate No.II
Madurantakam